93—

விளையாட்டு அரங்கம்

***11989—திரு. கோ. செந்தில் குமார்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி தொகுதியில், விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதியில் விளையாட்டு அரங்கம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. செந்தில் குமார் அவர்கள்.*

திரு. கோ. செந்தில் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 11 மாதங்களில் என்னுடைய முதல் கேள்வியைக் கேட்க இருப்பதனால், ஒரு நிமிடம் அளிக்க வேண்டும். மாண்புமிகு புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் திரு. எம்.ஜி.ஆர். அவர்களையும், மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், முன்னாள் முதல்வர் அண்ணன் திரு. E.P.S. அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சி துணைத் தலைவர், முன்னாள் முதல்வர் அண்ணன் திரு. O.P.S. அவர்களையும், வாணியம்பாடி சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெறச் செய்த திருப்பத்தூர் மாவட்ட கழகச் செயலாளர், அண்ணன் திரு. கே.சி. வீரமணி அவர்களுக்கும். . .*

2022 ஏப்ரல் 11]

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கோ. செந்தில் குமார்: *எனது கட்சியைச் சார்ந்த கழகத் தோழர்களுக்கும், எனது தந்தைக்கும், வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கும், எனது நன்றியை காணிக்கையாக்குகிறேன்.*

வாணியம்பாடி தொகுதி, அதிகமாக இஸ்லாமியர்கள் வாழும் பகுதி மற்றும் இளைஞர்கள் நிறைந்த பகுதியாகும். வாணியம்பாடி நகரப் பகுதியில் இஸ்லாமியர் கலைக் கல்லூரி எதிரில் அரசுக்குச் சொந்தமான 6–1/2 ஏக்கர் நிலம் உள்ளது. அந்த இடத்தில் நவீன வசதிகளுடன்கூடிய உடற்பயிற்சிக் கூடம், நவீன நீச்சல் குளம் மற்றும் யோகா மையம் ஆகியவை கொண்ட சிறு விளையாட்டு அரங்கம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா என்பதை அன்போடு கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டமானது விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் நிறைந்த மாவட்டமாகப் பார்க்கப்படுகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், விளையாட்டுத் துறையில் இன்றைக்கு பல்வேறு திட்டங்களை முன்னெடுத்துச் செல்கின்றார்கள். அந்த வகையில், வேலூர் மாவட்டம், காட்பாடி தொகுதி, நமது மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் தொகுதியில் 36.68 ஏக்கர் பரப்பளவில் கிட்டத்தட்ட 19.24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 14–3–2022 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஒரு மாபெரும் விளையாட்டு அரங்கத்தினை திறந்து வைத்திருக்கிறார்கள். அந்த விளையாட்டு அரங்கத்தினை திருப்பத்தூர் மாவட்ட விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்ன வாணியம்பாடி தொகுதியினுடைய விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள், சமூக ஆர்வலர்கள் ஆகியோரின் கோரிக்கையினை

கருத்தில் எடுத்துக்கொண்டு, வாணியம்பாடி தொகுதியில் இருக்கக்கூடிய வாணியம்பாடி வட்டம், நிம்மியம்பட்டு கிராமத்தில் அரசுக்குச் சொந்தமான 6 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டுள்ளது. அந்த இடத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய பாராட்டைப் பெற்ற, இந்தியத் திருநாட்டினுடைய மேனாள் பிரதமர், பொருளாதார மேதை, மாண்புமிகு டாக்டர் மன்மோகன் சிங் அவர்களது பாராட்டினைப் பெற்றிருக்கின்ற, தமிழக நிதியமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்ற சட்டமன்றத் தொகுதியில் ஒரு Mini Indoor Stadium அமைக்கப்படும் என்கின்ற திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, நிதிநிலைமைக்கேற்ப வாணியம்பாடி தொகுதியில் விளையாட்டு அரங்கம் அமைத்துத்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. செந்தில் குமார் அவர்கள்.*

திரு. கோ. செந்தில் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் சுமார் 12,500—க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. ஒவ்வொரு கிராமத்திலும் பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் உள்ளனர். ஆனால், பெரும்பாலான கிராமங்களில் விளையாட்டு மைதானங்கள் இல்லை. பொதுவாக விளையாட்டு மைதானங்கள் அமையப்பெற்ற ஊர்களில் மருத்துவமனைக்கான அவசியமில்லை என்பது பொது மொழி. மேலும், இளைஞர்களின் உடல் நலமும், மன நலமும் பேணக்கூடிய இடமாகவும், அனைவரும் ஒன்றாக விளையாடி ஒற்றுமையை பேணும் இடமாகவும் விளையாட்டு மைதானங்கள் இருக்கின்றன. எனவே, தமிழகத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் சிறு விளையாட்டு மைதானங்கள் அமைத்துத்தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர்

2022 ஏப்ரல் 11]

ஐயா அவர்களின் 2006–2011 ஆம் ஆண்டு ஆட்சிக்காலத்தில் அன்றைக்கு தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சராகவும், துணை முதலமைச்சராகவும் இருந்த மாண்புமிகு இன்றைய தமிழக முதலமைச்சர் அவர்கள் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 12,524 ஊராட்சிகளிலும் விளையாட்டு மைதானங்களை உருவாக்கித் தந்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளையாட்டுத்துறைக்காகவும், விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்துவதற்காகவும் இன்றைக்கு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். அந்த அடிப்படையில், தொடர்ந்து விளையாட்டு மைதானங்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 2019–2020 ஆம் ஆண்டுக்கான முதலமைச்சர் கோப்பைக்கான பல்வேறு போட்டிகள் கொரோனா பெருந்தொற்று காரணமாக நடத்த முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. நமது முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடனேயே, முதலமைச்சர் கோப்பைகளுக்கான போட்டிகள் எல்லாம் நடத்தப்பட்டு, வெற்றிபெற்ற 616 விளையாட்டு வீரர்களுக்கு 4 கோடியே 16 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விரைவில் வழங்கப்பட உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. அப்துல் சமது அவர்கள்.*

முற்பகல் 11–05

திரு. ப. அப்துல் சமது: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மணப்பாறை தொகுதியில் ஹாக்கி உள்ளிட்ட விளையாட்டுகளில் தேசிய அளவில் விளையாடி பரிசுகளைப் பெற்ற வீரர்கள் இருக்கிறார்கள். இன்னும் பல விளையாட்டுகளில் ஆர்வம் உள்ளவர்கள் இருக்கிறார்கள். ஆனால், தனியார் மைதானத்தைப் பயன்படுத்தக்கூடிய ஒரு சூழல் இருக்கிறது. புதிய விளையாட்டு வீரர்களை உருவாக்கவும், இளைஞர்களை ஊக்கப்படுத்தவும் நம்முடைய அரசின் சார்பில் அங்கே ஒரு விளையாட்டு அரங்கம் அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல்– காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், மணப்பாறை தொகுதியில் Hockey stadium கேட்டிருக்கிறார்கள். அதற்கான கருத்துருக்கள் ஆராயப்பட்டு, வாய்ப்பு இருப்பின் அங்கே புதிய hockey மைதானம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு

போளூர், இரயில்வே மேம்பாலப் பணியைத் துரிதப்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போளூரில் நடைபெற்றுவரும் இரயில்வே மேம்பாலப் பணிகளைத் துரிதப்படுத்துவது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கெண்டுவருகிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.